**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**<u>DVC. No. 1/2020</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ஜோதி | | Date | : 06.05.2025 |
| Husband Name | : செந்தில் | | | : |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

1. நான் மேலையூரில் உள்ள 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் தான் வசிக்கிறேன் என்றால் இல்லை. நான் வழக்கு போட்ட நாள் முதல் எனது தகப்பனார் வீட்டில் தான் வசித்து வருகிறேன். நான் வழக்கு தாக்கல் செய்த போது எனது தகப்பனார் வீட்டில் தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். நான் எனது மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் மேலத்தெரு, மேலையூர், கருவாழக்கரை அஞ்சல் என்ற முகவரியில் வசித்து வருகிறேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது சொத்துகள் மற்றும் பொருப்புகள் ஆணையுறுதி ஆவணத்தில் மேற்படி முகவரியில் தான் வசித்து வருகதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என கோரி சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் அந்த வழக்கில் தாக்கல் செய்த முதன்மை விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் மேலத்தெரு, மேலையூர், கருவாழக்கரை அஞ்சல் என்ற முகவரியில் வசித்து வருகிறேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் அவரது வீட்டில் ஒரு பகுதியை நான் தங்குவதற்காக எனக்கு ஒதுக்கி கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

3. நான் 1ம் எதிர்மனுதாரரிடம் ஜீவனாம்சம் கோரி ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் MC 35/2019 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் கடந்த 03.02.2024 அன்று ஜீவனாம்சம்

கொடுக்க கோரி எனக்கு சாதகமாக தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் மேற்படி வழக்கு விபரத்தை மறைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆணையுறுதி பத்திரத்தில் தவறாக தகவல் கொடுத்து தாக்கல் செய்வது தண்டணைக்குரிய குற்றம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரங்கள் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் அதை மறைத்துவிட்டு தற்போது தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. எனக்கு கடன் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு கடன் இருப்பதற்காக ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு கடன் இல்லாததால் தான் நான் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவரது வீட்டில் நான் தங்குவதற்கு எனக்கு ஏற்கனவே இடம் ஒதுக்கியுள்ளதால் நான் கோரும் உறைவிட பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இது நாள் வரை எதிர்மனுதாரர் வீட்டில் தான் எனது பொருட்கள் உள்ளது என்றால் பாத்திரங்கள் மட்டும் தான் உள்ளது. எனக்கு ஒதுக்கப்பட்ட பகுதி மழை பெய்தால் தண்ணீர் கசியும் அதனால் எனது பாத்திரங்கள் சேதம் அடைந்து உள்ளது. மேற்படி வீடு 1ம் எதிர்மனுதாரர் பெயரில் இல்லை என்றால் சரிதான். அவரது தந்தை பெயரில் உள்ளது. மேற்படி வீடு 1ம் எதிர்மனுதாரரின் தாயாரான 3ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. வீட்டு வரியும், மின் கட்டண ரசீதும் 3ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ளது.

5. ஏற்கனவே MC 35/2019 என்ற வழக்கில் ஜீவனாம்சம் பரிகாரம் எனக்கு கிடைக்கபெற்றுள்ளதால் இந்த வழக்கில் நான் கோரும் ஜீவனாம்சம் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது கணவர் பெயரில் லாரி எதுவும் இல்லை என்றாலும் அதனால் தான் அதன் பதிவெண்ணை மனுவில் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு லாரியின் பதிவெண் தெரியும். அதன் பதிவெண் TN 49 K 3516 ஆகும். மேற்படி லாரியானது 1ம் எதிர்மனுதாரர் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. ஆரம்பத்தில் 1ம் எதிர்மனுதாரர் பெயரில்

தான் இருந்தது, அதனை 1ம் எதிர்மனுதாரர் அவரது 2வது மனைவியான விஜி பெயரில் மாற்றியுள்ளார். 1ம் எதிர்மனுதாரர் பெயரில் விவசாய நிலங்கள் எதுவும் இல்லை என்றாலும் விவசாய நிலங்கள் உள்ளதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவரது பெயரில் 450 குழி நிலம் மேலையூரில் உள்ளது. மேற்படி நிலம் 1ம் எதிர்மனுதாரரின் பெயரில் இல்லை என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு 1ம் எதிர்மனுதாரர் அவரது பெயரில் இருந்த லாரியை விஜி என்பவர் பெயருக்கும் நிலத்தை 3ம் எதிர்மனுதாரரின் பெயருக்கும் மாற்றி எழுதிவிட்டார். இந்த வழக்கிற்கு பிறகு அவர் மாற்றி எழுதிகொடுத்துவிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. 1ம் எதிர்மனுதாரருக்கு மாடி வீடு உள்ளதா என்றால் மேலப்பாதியில் உள்ளது. 1ம் எதிர்மனுதாரருக்கு மாடி வீடு இல்லை என்றாலும் அதனால் தான் மனுவிலும், ஆணையுறுதி பத்திரத்திலும் அந்த வீட்டின் முகவரியை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் டிராவல்ஸ் வைத்து நடத்திவருவதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மயிலாடுதுறை அனைத்து மகளிர் காவல் நியைலத்தில் புகார் கொடுத்தது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்களை அழைத்து சமாதானம் செய்து வைத்தார்கள். நான் கொடுத்த புகார் உண்மைக்கு புறம்பானது என்பதால் தான் போலீசார் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஒரே பரிகாரத்திற்காக இரண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.